Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

[விரோதி ௵ (1889) ஆவணி௴ 28உ ஆரம்பமானது]

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி:சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரிஞு கார்த்திகைமீ ௩௨ வெள்ளிக்கிழமை (18 November 1960) [இல-௩௩]

# தமிழ்மொழிமூலம் "பிரிவேனுப் பாடசாலைகள்" வேண்டும்

## அமைப்பித்தற்கு உடனே முயற்சித்தல் அவசியம்

(திரு. க. வீரகத்தி, இணைச்செயலாளர், பண்டிதர்கள் சங்கம்)

### அன்றும் இன்றும்

"ஆட்டுக்குத் தீர்ந்தது குட்டிக்குந்தானே" இது பழைய நம்பிக்கை. பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்ப் போய்விட்டது இந்நம்பிக்கை. இன்று ஆட்டுக்குத் தீருவது குட்டிக்கும் என்பதின்றி ஆட்டோடு நின்றுவிடுகிறது. குட்டி புறம்பாகப் போராட வேண்டியதுதான். நாளும் நாளும் குட்டி போராட வேண்டிய பிரச்சனைகள் குட்டிபோட்டுக் கொண்டே வருகின்றன. அவற்றுள் ஒன்றுதான், தமிழ்மொழிமூலம் பிரிவேனுக்கள் (கோயிற் பாடசாலைகள்) நடத்துவதற்குச் சட்டபூர்வமான வசதியைப் பெற்றுக் கொள்வது. பலத்த கிளர்ச்சியின்பேரில், போராட்டத்தின் பேரில், இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாமென எண்ணக்கிடக்கின்றது. குட்டியினது போராட்டமேயல்லாமல் இது ஒரு குட்டிப் போராட்டமன்று என்பதைத் தமிழ்பேசும் மக்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டுமெனப் பெரிதும் விரும்பப்படுகிறது.

### பிரிவேனு என்பது என்ன?

சிங்களம், பௌத்தம், சிங்கள பௌத்த கலாசாரம் ஆதியவற்றைப் பேணிவளர்க்கும் நோக்கமாகப் பௌத்த மதக் குருமார்களை முகாமையாளர்களாகக் கொண்ட கோயிற்பாடசாலைகளே பிரிவேனுப் பாடசாலைகளென அழைக்கப்படுகின்றன. இவற்றுக்கெனப் பிரத்தியேகமான கல்விச் சட்டம் 'பிரிவேனுக் கல்விச்சட்டம்' என்ற பெயருடன் 39-ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. படிப்படியாகச் சிங்கள மக்கள் நலனுக்குகந்தமுறையில் திருத்தங்கள் பெற்றன. இறுதியாக 1959-ம் ஆண்டு, நமக்காகவும் ஏனை மதத்தாபனங்கட்காகவும் கண்ணீர் வடித்துக் கசிந்துருகும் முன்னைநாள் ஏழை பங்காளன் விஜயானந்த தகநாயக கல்வி மந்திரியாயிருந்த காலத்தில் "பிரிவேனுக் கல்விச் சட்டம்" முழுக்க முழுக்கப் புத்துருவம்பெற்று வலிவும் வனப்பும் உள்ளதாய் நிரந்தர இடம் பெற்றுள்ளது.

### 1959-க்கு முன் பிரிவேனு

1959-ம் ஆண்டுக்கு முன்பு பிரிவேனுக்கல்வி குறித்த ஒரே துறையிற்றான் சென்றது. அஃதாவது சிங்களப்பிராசீன பண்டிதர்களை உற்பத்தி செய்வதே அதன் முக்கிய வேலையாக இருந்தது. பிரவேச, பாலபண்டித, பண்டித ஆயத்த வகுப்புக்களை நடத்தி இவ்வுற்பத்தியைத் துரிதமான வேகத்தில் செய்து கொண்டு வந்தது. இப்பிரிவேனுக்களின் சேவையினுற்றான் இன்று 600 க்கு அதிகமான சிங்களப்பண்டிதர்களை நாம் காணமுடிகிறது.

### 1959-ன் பின்

திடீரெனப் பிரிவேனுக்களுக்கு யோகம் பிறந்தது. காலி வீரர் கல்வி மந்திரியானுர். பிரிவேனுக்களின் தாதாவாக, இரட்சகராக மாறினுர். பிரிவேனுக்கல்விச் சட்டத்தைத் திருத்தினுர். அரசாங்க மானியத்தை அள்ளி இறைத்தார். பிரிவேனுக்களின் அந்தஸ்தை உயர்த்தினுர். வித்தியாலங்கார வித்தியோதய பிரிவேனுக்கள் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டன. 1959-ம் ஆண்டு திருத்தப்பட்ட பிரிவேனுச் சட்ட விதிகளில் முக்கியமானவை பின்வருமாறு.

1. விதி 4

ஒவ்வொரு பிரிவேனுவிலும் போதனு மொழி சிங்களமேயாகும்.

2. விதி 6

(1) ஒவ்வொரு பிரிவேனுவிலும் பிரதம பாடங்களாகவும் துணைப்பாடங்களாகவும் இருதரப்படுத்தப்பட்ட பாடங்களைப் படிப்பிக்கலாம்.

(2) பின்வருவன பிரதம பாடங்களாகும்:- சிங்களம், பாளி, சமஸ்கிருதம், புத்ததர்மம், தத்துவம், மொழியியல், யாப்பு, அணி, சரித்திரம், கட்டடக்கலை, ஆயுள் வேதம் என்பன.

(3) துணைப் பாடங்களாவன.-ஆங்கிலம், தமிழ், இந்தி, புவியியல், உளவியல், உடல் நலவியல், குடியியல், பொருளியல், எண்கணிதம், கணிதம், ஓவியம், பொது விஞ்ஞானம், வானவியல், சோதிடவியல் ஆகியவையும், வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்படும் இவைபோன்ற பிற பாடங்களும்,

3. விதி 10

(2) பிரிவேனுக்களின்படி நியமிக்கப்பட்ட ஆசிரியர்கட்கு அவரவர்களின் தராதரத்திற்கேற்ப உதவிபெறும் ஆங்கில பாடசாலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போல் சம்பளம் அரசாங்கத்தால் நேரடியாகக் கொடுக்கப்படும்.

4. விதி 13

(1) ஒரு பிரிவேனுவின் அதிபர் வித்தியாதிபதியின் அங்கீகாரத்துடன் பின் குறிப்பிடும் பகிரங்க பரீட்சைகளில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பரீட்சைகளுக்கு வகுப்புக்களை வைத்துப் படிப்பிக்கலாம்.

A. கொழும்பு கீழைத்தேய பாஷாபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்படும் பிராசீன பண்டித பரீட்சைகள்.

B. கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை.

C. அங்கீகரிக்கப்பட்ட எச்சர்வ கலாசாலையினதும் புகுமுகத் தேர்வுகள்.

D. ஏச்.எஸ்.சி. பரீட்சைகள்.

E. ஜீ. சீ. ஈ. உயர்தர (Advanced Level) பரீட்சைகள்.

F. எந்தச் சர்வகலாசாலையும் நடத்தும் குறிப்பிட்ட எப்பரீட்சைக்கும் குறித்த சர்வகலாசாலையின் அங்கீகாரத்தைப் பெற்றபின்பு பரீட்சார்த்திகளை ஆயத்தஞ்செய்ய முடியும்.

5. விதி 25

(1) பிரிவேனுப்பாடசாலைகள் கனிட்ட பிரிவேனு, சிரேட்டபிரிவேனு, பல்கலைக்கழகப்பிரிவேனு என மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(A) ஒரு பிரிவேனுவில் 100-க்கு மேற்படாத சராசரியாக இருந்தால் தலா ஒன்றுக்கு (150/-) நூற்றைம்பது ரூபா வீதம் அரசாங்கத்தால் வருட மானியம் அளிக்கப்படும்.

(B) சராசரி 100-க்கும் 200-க்கும் இடையிலென்றால் முதல் நூற்றிற்குத் தலா (150/-) நூற்றைம்பது வீதமும் அடுத்த ஒவ்வொன்றிற்கும் (100) நூறு ரூபா வீதமும் அளிக்கப்படும்,

(C) 200-க்கு மேற்பட்டால் முதல் நூற்றிற்குத்

தொடர்ச்சி 6ம் பக்கம்)

## நற்சிந்தனை

—o—

இம்மைக்கும் மறுமைக்குந்
 துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில்
 மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனு
 யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல
 வழங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச் செருக்கெல்லாம்
 புறக்கணிக்குந் தெய்வம்
போதாரும் மலர்தூவிப்
 போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே
 வாழுகின்ற தெய்வம்
சித்தத்துட் டித்திக்குந்
 தெய்வமிது தானே.

(சிவ தொண்டன்)

அரசியல் அலை;

## வெளிமடை அங்கத்தவரின் விழிப்பும் பழிப்பும்!

### தமிழ் இனத்தின் பரமசத்துராதி வேடந்தாங்கும் தன்மை!!

கூச்சமின்றிக் கூறுவதற்குச் சில அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கின்றார்கள் அவர்களில் முன்னணியில் இருப்பவர் அந்த வெளிமடை அங்கத்தவர் திரு. கோனுர் இராசரத்தின; வேட்டை விலங்குகள்கூடச் சிறிதுதூரம் ஓடிக் களைத்துப்போனுல் தங்கள் இரையை விலகவிட்டுவிடும்—ஆனுல் இந்த வெளிமடை வீரனேவிடமாட்டார். கடைசி வரைக்கும் கடும்பிடி பிடித்தபடியே இருப்பார்,

ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை ஒன்றில் வடகிழக்கு மாகாணங்களில் ஆங்கிலமும் அங்கீகரிக்கப்பண்ணும் ஒரு சட்டம் இயற்றப்பட இருக்கின்றதென்றசெய்தி வெளியான அடுத்த விநாடிக்குள் வெலிமடை வீரன் ஆவேசங்கொண்டு அலுவல் பார்க்கத் தொடங்கி விட்டார்.

வெலிமடை வீரனின் விபரீத புத்தியில் இந்த 'ஆங்கிலமும்' என்றஒழுங்கு தமிழ் இனத்தால் வரவேற்கப்படும் என்று தோற்றிய விந்தையே விந்தை.

இனவெறி உண்டுபண்ணி இனக் குழப்பத்தை மறுபடியும் கொண்டுவர இடையறாது -தடையிலாது முயன்றுவரும் வெலிமடை வீரனைப்பற்றி ஒரு தனி விசாரணை நடத்த ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று பொது சனம் நினைக்கின்றது,

## சமயக்கல்விப் பட்டதாரிகளுக்கு முதலிடம்

### சைவப்புலவர்கள் செய்துள்ள தீர்மானம்

சமயக்கல்வியில் பட்டதாரிகளாக விருக்கும் ஆசிரியர்களுக்குச் சமய பாடபோதனையில் முதலிடங் கொடுத்து ஆதரியுங்கள் என்பது அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கச் செயற்குழுவின் பிரேரணை. இப்பிரேரணையைப் பிரதம மந்திரிக்கும் கல்வி மந்திரிக்கும் அனுப்பி வைப்பதெனச் செயற் குழு தீர்மானித்துள்ளது.

ஷை சங்கச் செயற்குழு 6-11-60 ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் ஆங்கிலபாடசாலையில் சங்கத்தலைவர் சைவப் புலவர் வித்துவான் திரு. செல்லையா அவர்கள் தலைமையில் கூடியது.

அன்றைய செயற்குழுக்கூட்டத்தில் சைவப்புலவர்கள் நிலைபற்றி ஆராயப்பட்டது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### ஜீ. சி. ஈ. கட்டாய பாடங்கள்

=o=

ஆங்கிலம், சமயம், சிங்களம் அல்லது தமிழ், கணிதம் அல்லது சாதாரண எண்கணிதம் ஆகியநான்கு பாடங்கள் 1962-ம் ஆண்டிலிருந்து ஜீ. சி. ஈ. கட்டாய பாடங்களாகும்.

ஒரு மாணவன் குறைந்தது ஐந்து பாடம் எடுக்க வேண்டும். கூடியது எட்டுப் பாடங்கள் எடுக்கலாம்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சார்வரி ஹூ கார்த்திகை மீ
௩ ௨ வெள்ளிக்கிழமை

## ஏளனத்துக்கும் ஒரு எல்லை வேண்டும்

தனிச் சிங்களம் அரசாளச் செவிலித்தாய் 'ஆங்கிலமும்' அணை கோலத் தமிழகத்தின் மொழித் தலைவலி நீங்கிவிடும் என்ற குறிப்புத் தோன்றும் வகையில் வேடிக்கையான செய்தியொன்று வெளியானதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே நீதிமன்ற மொழியாக 'ஆங்கிலமும்' அநுமதிக்கப் பெறுவதற்கு ஒரு சட்டம் இயற்றப்பட விருக்கின்றது என்ற செய்தி உருவானதை நினைத்துச் சிரிப்பதா சிணுங்கி அழுவதா அல்லது சீற்றங்கொண்டு கண்டனம் செய்வதா என்பதுதான் தமிழ் மக்கள் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சி.

தமிழகத்திலே தாய்மொழியாக் தமிழ், நீதிமன்றத்தில் வழங்குவதற்கு உரிமையில்லையாம். புறநாட்டு மொழி ஒன்று தனிச் சிங்களத்துக்கு வழித்துணையாகப் பயன்படுத்தப் பெறலாமாம். என்ன இறுமாப்பான எண்ணம்! சிங்களமே சிங்காசனத்துக்குரியது; ஓரளவுக்கு வேறு வழி செய்ய வேண்டுமேயானால் ஆங்கிலம் (உம்) (Also) அந்த வரிசையில் இடம் பெறலாம்; இல்லையேல் இலத்தின் முதலிய இதரமொழிகளில் ஒன்றாயுமிருக்கலாம். ஆனால் தமிழ், தாய்த்தமிழ் என்பது நனவிலும் ஆகாது என்பதுதான் இந்த தனி ஆட்சியாளரின் அரசியற்கொள்கை,

இது இவ்வளவில் இருக்கப் பாராளு மன்றத்து வெளி மடை அங்கத்தவர் பழுதையைக்கண்டு பாம்பென்று பயங்கொண்டு பாரில் உள்ளார் கூடும்படி கூக்குரல் இட்டவாறு தமிழ் இனத்தின் மானத்தைப் போக்கும் 'ஆங்கிலமும்' என்ற ஆலோசனையைக் கேட்டவுடன் அபாயம் அபாயம் என அகிலமும் அறிய அவலக் குரல் எழுப்பின விபரீதத்தைப் பற்றி இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது. இந்த வெளிமடை வீரன் வாய் மலர்ந்தால் அந்தத் தமிழ்இனத்தின் மேற் பழிசுமத்தும் மொழிகள் அன்றி வேறு தோற்ற மாட்டா. உடம்பிற் செறிந்த இந்த விடத்துக்கு மாற்று மருந்தில்லை என்பதை யாவருமறிவர். அப்படியானல் இவர் அடிக்கடி கடாவுங் கேள்விகளுக்கு ஆளுங் கட்சி சார்பாக விடை கொடுப்பவர்கள் அவருக்கேற்ற மறுமொழி பகர்வதன் நோக்கமென்ன? கேள்வியைக் கேட்க வைத்து மறுமொழி கூறும் வாய்ப்புப்பெற்று ஊரில் உலாவும் வதந்திகளை மறுப்பது அரசியல் மரபாகாது.

இந்தக் கேள்வி — மறுமொழிப் படலம் விந்தையானது என்றுமட்டும் சொல்லித் தள்ளிவிடப் படக்கூடிய தொன்றன்று. வேதனையைக் கொடுக்கும் விடம் பொதிந்த 'தனிச் சிங்கள'க்கட்சி நடைமுறையென்றே இது கருதப்பட வேண்டும். ஆகவே தமிழினத்தின் மானபங்கத்துக்குரிய சூழ்ச்சியாகும். இதைத் தமிழ்பேசும் மக்களும் தலைவர்களும் மறந்துவிடுதல்கூடாது.

# யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக் கழகம்

சேர். பொன். இராமநாதனவர்களின் புனித சித்தத்தெழுந்து யாழ்ப்பாணத்தில் உருப் பெற்றிலங்கும் இராமநாதன் கல்லூரியையும பரமேஸ்வரக் கல்லூரியையும் ஓர் இந்துப் பல்கலைக் கழகமாக்கி அதற்கு இராமநாதன் பல்கலைக் கழகமென்று நாமகரணம் செய்வதற்குக் கல்வி அமைச்சர் ஜனுப் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் அங்கீகாரமளித்துள்ளார்களென அறிகினறோம்.

கௌரவ சேர். பொன் இராமநாதனவர்களின் மருகர் ஸ்ரீ சு. நடேசபிள்ளை அவர்கள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகவுக்கும், கல்வி அமைச்சருக்கும் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் காலம் சென்ற திரு. பண்டாரநாயக்கா வித்யோதய வித்யாலங்கார பல்கலைக்கழகங்களை அங்குரார்ப்பணம் செய்த பொழுது தமிழர்களுக்கும் ஒரு காலாசார பல்கலைக் கழகத்தை ஏற்படுத்திக் கொடுக்கத் தாம் தயாராக இருப்பதாக அளித்த வாக்குறுதியை இச்சம்பவம் நிறைவேற்றி வைப்பதாகின்றது.

சைவ வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வழிவகுத்த கௌரவ சேர். பொன், இராமநாதனவர்களின் சித்தப் போக்கைக் கடைப் பிடித்தொழுகும் பெரியார்களின் நன்முயற்சி என்றென்றும் பொலிவதற்கு எல்லாம்வல்ல இறைவன் அருள் முன்னின்று நல்லுள்ளங்களை ஊக்குவிக்க வேண்டுகின்றேம். ——

### கோயிலாக்கண்டிச் சிவன்கோயில் நிதி

| | ரூ. ச. |
|---|---|
| முன் சேர்ந்த தொகை | 540-50 |
| திரு பொ. அப்புக்குட்டி (நன்கொடை, ரிக்கற்) நல்லூர் | 38-50 |
| சைவப்பிரகாசயந்திரசாலை | 40-00 |
| திரு. இ. இளையதம்பி, பதுளை | 10-00 |
| | 6?8-50 |

### இலங்கைக் கடற்படையின் புதிய தலைவர்

இலங்கைக் கடற்படைக்கு இப்பொழுது மீகாமன் ராஜன்கதிர்காமர்(38வயது) பதில் தலைவர். கடற்படைத் தளபதி ரீயா. அட்மிரல் ரோஸ் டிமெல்லும் மற்றும் 6 கடற்படை உயர்தர அதிகாரிகளும் தற்காலிகமாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டதால் இவர் இப்பதவியைப் பெற்றார்.

### இதுவும் அப்படி என்றால்...

பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுக்கும் முயற்சியில் இலங்கையை மூன்று பகுதிகளாக்குவதாக யோசனை கூறப்படுகின்றதாம். கொழும்பு, கண்டி, அநுராதபுரம் ஆகிய மூன்றும் பகுதிகளாகவும், பகுதித் தலைமை அலுவல் இடங்களாகவும் இருக்கும் என்றும் ஆலோசனை அளிக்கப்படுகின்றதாம்.

யாழ்ப்பாணம் என்ற இடம் இந்தப்படத்தில் இல்லை!

# நாம் செய்யவேண்டியது

உலகம், மக்கள், பண்டங்கள் நிலையல்லாதவை. பிறப்பு இறப்பு, தோற்றம், அழிவு என்பன சகசம். கால ஓட்டத்தில் மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த நிலையில்லாத வாழ்வில் ஈடுபடாது, தேட வேண்டிய பொருளைத் தெரிய வேண்டிய பொருளை, அதாவது சிவஞானத்தைத் தேட முயலவேண்டும். "பக்தி வலையிற்படுவோன் காண்க" என்ற அருள்வழி நின்ற மேலோர் அனுபவத்தை நாம் நோக்கிப் பக்திமார்க்கத்தில் ஒருமைப்பட்டு ஈடுபட வேண்டும். வெளிச்சத்தைச் சேர மார்க்கம் அவசியம். நமது நோக்கத்தைப் பெரிதென மதித்துச் செல்லுதலே இலட்சியமார்க்கமாகும்.

பக்தி மார்க்கம் எப்படியிருக்க வேண்டும். நூல்களைப் படித்தால்மட்டும் போதாது. பெரியோர் கூறிய-சொல்லிய-விடயங்களைக்கேட்டு அறிந்து அவர்கள் வாழ்ந்துகாட்டிய வழி நின்று ஞான நூல்களைப் படித்து இறை வணக்கத்தில் ஈடுபடுதல் வேண்டும். சிவனைத் தேடும் மார்க்கம்தான் சன்மார்க்கமாகும். மற்றைய செய்கைகள் எல்லாம் காலத்தை அவமே போக்கும் மார்க்கமாகும்.

சத்துக்களைத் தேடி அறிதல் சன்மார்க்கமாகும். சன்மார்க்க சபை, நல்ல மார்க்கத்தைச் சொல்லும் சபைதான். அப்படி என்றால் சைவமதம்-சிவமதம் - சிவசம்பந்தத்தை அடைய நாம் நல்ல பாதையைத் தெரிந்தெடுக்க வேண்டும். நமது கொள்கைகள், பண்பாடுகள் எல்லாம் அந்நிய மோகத்தால் கலங்கல் நிலையில் இருக்கின்றன. நமது மக்கள் எது பாதை என்று அறியாது தவிக்கிறார்கள். நாம் முக்கிய பொருளை மறந்து விட்டோம்; அழியக்கூடிய நிலையில்லாதவற்றை உண்மையானவை, நிலையானவை என எண்ணி விட்டோம். இவற்றைவிட்டு நாம் பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டும். இதனால் இறைவன் அருள் கிடைக்கும். நமக்கு வேண்டியன எல்லாம் கிடைக்கும்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் பக்திமார்க்கம்பற்றிப் பேசிய பேராசிரியர் [illegible].

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# மருதமரத்தடியில் விநாயகரை வழிபட்ட மகா வித்துவான்

முற்றேடர்—4.

நயினைதீவிலிருந்து மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலைக்குத் தலைமை யாசிரியராக மாறிவந்த காலத்தில், நாவலர் வித்தியாசாலையிற் றமிழ்ப் பண்டிதராக இருந்த குமாரசுவாமிப் புலவர் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக இளைப்பாறினர். அவரது இடத்தை நிரப்புமாறு நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் ஐயர் அவர்களைக் கேட்டனர். விசாலாட்சி வித்தியாசாலை முகாமையாளர் இதனை விரும்பவில்லை. திரு. கைலாசபிள்ளை அவர்களின் கருத்துக் கைகூடவில்லை.

சுன்னகத்தில் பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்கள் நிறுவிய சதாசிவப் பிராசீன (உயர்தர) பாடசாலையின் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக ஐயர் அவர்கள் கடமையாற்றினர்.

ஸ்ரீ. இ. சுந்தரராஜ சர்மா

இப்பாடசாலையிலேயே அவர் இறுதியாகப் பாடசாலைக்குச் சென்று படிப்பித்தார். பிரவேச பால பண்டித வகுப்புகள் நடாத்தப்பட்டன.

ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்களின் முயற்சியே தொல்காப்பியப் பதிப்புகள் வெளிவரக் காரணமாக அமைந்தது. முதலில் தொல்காப்பிய எழுத்ததிகாரம் அச்சுவாகன மேறியது. மஹாமஹோபாத்தியாய கலாநிதி பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஐயர் அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வரும் கருத்தைக் கூறியுள்ளார். 'தற்காலத்தில நூல் அச்சிடுவோர் தம் இலாபங் கருதுகின்றனரே தவிர உண்மையிற் பலகாலம் ஆராய்ந்து அதனை வெளிக்கொணருகிறார்களில்லை அங்ஙனஞ் செய்வோர் மிகச்சிலரே. அவர்களிற் றுங்களும் ஒருவர்.

எழுத்ததிகாரத்தினைத் தொடர்ந்து, சொல்லதிகாரமும், பொருளதிகாரமும் அச்சுவாகனமேறின. தமிழ் கற்க விரும்புவோருக்குக் கலங்கரை விளக்கம் போன்று இவர் வெளியிட்டுள்ள நூல்கள் விளங்குகின்றன,

—தொடரும்.

### வீமாச் சங்கங்களும் போமா?

—:—

எடுக்கும் மாப் பணியிற் சென்று கொண்டிருக்கும் சுதந்திரக் கட்சி ஆட்சியாளர் வீமாச் சங்கங்களையும் கை ஏற்கப் போகின்றார்களாம் இதற்கென ஒரு திட்டம் மக்கள் சபையில் வர்த்தக மந்திரியால் சமர்ப்பிக்கப்பட்டது.

### சிக்கல்களை நீக்கும் வழி

உடனேயோ அல்லது பின்போ உண்மை வெளிவருகின்றது. உண்மை துன்பத்தையுண்டாக்குவதில்லை. அது ஒரு போதும் வெறுப்பையுண்டாக்குவதில்லை. நல்லெண்ணத்தையும் சுயநலனற்ற அன்பையும் ஆதாரமாய்க் கொண்டுள்ளது சத்தியம். சமாளித்தல் என்பது சத்திய நெறியில் இடம் பெற மாட்டாது.

அன்பு, தூய்மை ஆதியவற்றை; ஆதாரமாகக்கொண்டு சத்திய நெறியில் வாழ்க்கை நடத்தப்படுமேனால் எல்லாச் சிக்கல்களும் தாமாகவே அகன்றுவிடும். சிக்கல்களை உண்டாக்குவது சுயநல வேட்கையே. தெய்வீக வாழ்க்கையெனப்படுவது சத்தியம், அன்பு, தூய்மை ஆகியவற்றைச் சிறிதும் சோர்வின்றிக் கடைப்பிடித்து வாழும் வாழ்வே வாழ்க்கையாகும்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாய் பூனைகளின் விஷம்

## நாம் கையாளவேண்டிய முறை

(முற்றொடர்-4)

**நாய்களுக்கு விசர் வருதற்குக் காரணங்கள்:**

1 போதிய உணவில்லாமை. 2, அதிக உஷ்ணம். 3. நோயுள்ள நாய்களுடன் விளையாடல். 4. நாய்களுடன் சண்டைபட்டுக் கடிபடல். 5. இறந்த பிராணிகளின் அழுகிய உடலை உண்ணல். 6. மலம் உண்ணல், இப்படியாகப் பல காரணங்களால் நாய்களுக்கு விசர் உண்டாகின்றது.

**விசர்நாயை அறியும் வழிகள்:-**

வாலைத் தொங்க விட்டுக்கொண்டு, தலையையும் தொங்க விட்டுக்கொண்டு, வாயால் நீர் ஊறியவண்ணம் நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு, இளைக்க இளைக்க ஓடும். காரணம் இல்லாமல் குரைக்கும்; ஊளையிடும். மரங்கள், தடிகள் முதலியவற்றைக் கடிக்கும். படுத்துக் கிடந்துகொண்டு வால்பக்கத்தால் சுழரும்; கண்ணைப் பார்க்கும்பொழுது பயங்கரமாக இருக்கும். கண் சிறிது சிவந்திருக்கும், மூக்கிலிருந்து சளிபோன்ற திராவகம் வடியும், வாயைத்திறந்து வெறுவாய் சப்பும். நோயைத் தாங்கமாட்டாது அலைந்து கொண்டேயிருக்கும். அந்தத் தருணத்தில் எதிர்ப்படும் பிராணிகளையும் மனிதரையும் தாக்கும். தாக்கும்போது பலமாகவே தாக்கும். அப்படித் தாக்கப்பட்டவர்களும் பிராணிகளும் அந்த நாயைப் பேரல அல்லற்பட்டு ஈற்றில் ஏற்பு வலியுண்டாகி இறத்தல் திண்ணம். இந்த நாயின் வாயிலிருந்து வடியும் நீரில் மிதித்தாலும், அந்நீர் பட்டாலும் துன்பமாகும்.

**பூனை:-**

பூனை நம் வீட்டில் வளர்க்கப்படும் பிராணியாகும். எலி பிடிப்பதற்காகவே வளர்க்கப்படும் பூனையும், சில சந்தர்ப்பங்களில் நம்மைத் தாக்குகின்றது. இதன் விஷமும் கொடியதாகும். இக்கடியையும் அலட்சியம் செய்யக் கூடாது. இது கடித்தால் இதன் விஷத்தால் கபம், சளிக்கட்டு, மார்பு வலிகள் உண்டாகும். இது காய்ச்சல் தொடங்கி, பெரிய வருத்தங்களுக்குக் காரணமாகவும் மாறும். கொடிய விஷமுடைய எலியைப் பிடித்து உண்ணும் பூனைக்கு எப்படியான விஷம இருக்கும் என்பதை உணரவேண்டியது நமது கடமையாகும். பூனைகளில் காட்டுப்பூனை மிகவும் பெரியது. இது வேட்டையாடி சிறு பிராணிகளைப் பிடித்து உண்ணும். இதுவும் கொடிய விஷமுடையது, வீட்டுப்பூனை நமது உணவுப் பொருட்களையும் எச்சில்படுத்தும். அதை எச்சிற்படுத்திய

விஷ வைத்தியர்
திரு. க. சிற்றம்பலம் அவர்கள்

உணவை நாம் உண்பது விஷமாகும். ஆகவே பூனைகளை வளர்ப்பதிற் கவனமாக இருத்தல் வேண்டும்.


**மண்ணுணிப்பாம்பு:-**

இது மண்புழுப் போன்ற உருவமுடையது. ஆனல் பளபளப்பானதாக இருக்கும். நிலத்திலுள்ள வெடிப்புக்கள், குப்பைகள், கூரைகளில் வசிக்கும். நாம் நித்திரையாகக்கிடக்கும்பொழுது எமது படுக்கையிலும் காணப்படும். இது கடித்தால் கொடிய விஷமாகும். நித்திரையில் நமது காதுத்துவாரங்கள், மூக்குத்துவாரங்கள் முதலியவற்றுள் போனல் மிகமிக அபாயமாகும். நாம் எப்பொழுதும் துப்புரவாகவும், கவனமாகவும், நமது படுக்கைகளை வைத்திருக்க வேண்டும். 3 அங்குலம் தொடக்கம் 6 அங்குலம் வரையும் நீளமுள்ளது. இதற்தும் விஷப் பற்களுண்டு. இதை அடித்துக் கொல்ல முடியாது. நெருப்பால் சுட்டால்தான் இறக்கும். இதற்குச் சிறுநீர் பொது மருந்தாகும்.

**வளையன்கள்:-**

இப்பாம்பு வீட்டுச்சுவர்களில் வசிக்கும். தவிட்டு நிறப் புள்ளிகளை யுடையது. 6 அங்குலம் தொடக்கம் 12 அங்குலம்வரை நீளமுள்ளது. வழுவழுப்பான உடலமைப்புள்ளது. தாக்கும்பொழுது நெருப்பால் சுடுவதுபோல உணர்ச்சியுண்டாகும். இது சுவர்களிலிருந்து வழுக்கி விழுந்து நிலத்தில் கிடக்கும். "சிமேந்து" நிலத்தில் இது ஓடமாட்டாது கஷ்டப்படும். சுவரிலிருந்து பல்லி, கரப்பான் பூச்சி, கறையான், சிலந்தி முதலியவற்றைப் பிடித்துத்தின்னும். பூனை இதைக்கண்டால் கடித்துக் கொன்றுவிடும்,

—தொடரும்.




### சமய சம்ஸ்கிருத வகுப்பு

சம்ஸ்கிருத விஸ்வபரிஷத்தினுடைய புத்தூர்க் கேந்திரத்தின் முயற்சியினுல் நீர்வேலியில் சென்ற 31-10-60 இல் வேதாகம சாஸ்திர வகுப்பு ஒன்று தொடங்கப்பட்டது. அத்தியார் இந்துக்கல்லூரியில் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இவ்வகுப்பில் சுன்னுகம் பிராசீன பாடசாலையாசிரியர் பிரம்மஸ்ரீ பி. சி. நடராஜா உபாத்தியார் அவர்களால் சம்ஸ்கிருத பாஷையும் வேத அத்தியயனம் முதலியனவும் பயிற்றப்படுகின்றன. அரசினர் உதவிபெற்று இவ்வகுப்பை ஒரு பாடசாலையாக நடாத்துவதற்கு நிர்வாகிகள் முயலுகின்றனர். முதலியார் அதத்தியார் அருணுசலம் அவர்கள் இதன் போஷகராய் அமர்ந்துள்ளார்.

—

நேயர்கள் நெஞ்சம்

## சிவாகம விளக்கம்

சைவசமயத்துக்கு அடிநிலையாகவுள்ள பழைய நூல்கள் ஆகமங்கள். இவை, திருக்கோயிலமைத்தல், திருவுருவங்களைக் கல்லில் செதுக்குதல், அவற்றை உலோகங்களில் வார்த்தல், வழிபாட்டு முறைகள், யோகம், ஞானம் முதலியவற்றைக் கூறுகின்றன. ஆகமக் கோட்பாடுகள் மொகஞ்சதரோ காலத்தில் இருந்தனவென்பது அறிஞர் சிலர் கருத்தாகும்.

இறைவன் மகேந்திர மலையிலிருந்து ஆதியில் ஆகமங்களை அருளிச்செய்தாரென்றும், அவை மறைந்து போனபோது அவற்றை அவர் மறுபடியும் அருளிச் செய்தாரென்றும் திருவாசகம் கூறுகின்றது. மகேந்திரமலை கடல்வாய்ப்பட்ட குமரி நாட்டில் இருந்ததெனச் சிலர் கூறுவர். அது பொதிய மலையிலுள்ளதாகப் பிறர் கூறுவர்.

முற்காலத்தில் சமய சம்பந்தமான அறிவுகள் குருமாணுக்க முறையில் அறிவுறுத்தப்பட்டு வந்தன. அவற்றை எழுதி வைக்கும் வழக்கம் இருக்கவில்லை. "அங்கிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்டு முரியவென்ப" என்னும் தொல்காப்பியச் சூத்திரமும் அதன் உரையும் இதனை விளக்குகின்றன.

திருமந்திரம் ஆகமங்களைப் பற்றிக் கூறுகின்றது.

"அஞ்சன மேனி
யரிவையோர் பாகத்த
னஞ்சோ டிருபத்து
மூன்றுள வாகமம்"

திருமந்திரத்தில் இன்னேரிடத்தில் ஒன்பது ஆகமங்களின் பெயர்கள் கூறப்படுகின்றன.

"பெற்றநல் லாகமங்
காரணங் காமிக
மூற்றநல் வீர முயர்
சிந்தம் வாதுளம்
மற்றவவ் வியாமெள
மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ்
சொல்லு மகுடமே"

இன்று ஆகமங்களின் பெயர்களாகக் காணப்படுவன காமிகம், சிந்தியம், யோககம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சிந்தம், சந்தானம், சருவோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம், காலோத்தரம், சுவாயம்புவம், ஆக்கினேயம் என்பன. இவ்விருபத்தெட்டுள் திருமந்திரத்துட் கூறப்பட்டுள்ள காமிகம், சிந்தம், சுப்பிரம், வீரம், மகுடம், வாதுளம், காலோத்தரம் என்னும் ஆறுமே காணப்படுகின்றன,

காஞ்சீபுரக்கைலாயநாதர் கோயிற் கல் எழுத்து ஒன்று இருபத்தெட்டு ஆக

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## அஞ்சா நெஞ்சம் உடையவர் யார்?

### அருளாளர் சொல்லின் பொருளென்ன?

அடியார்கள் வீரம் நிறைந்தவர்கள். "வீரமென்றால் விளம்பும் தகையதோ" என்று கூறினர் சேக்கிழார். இறைவனது அருளையே நாடியடையும் அவர்கள் ஒன்றுக்கும் அஞ்சமாட்டார்கள். "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்று பாடினர் நாவுக்கரசர். ஈசனன்புகிட்டக் கிட்ட அவர்கள் இறுமாப்புக் கொண்டவர்களாகவே தோற்றுவார்கள். அவர்களுக்கு உலகத்தில் வேண்டுவது ஒன்றுமில்லை, இயமனைக்கூட எதிர்த்துப் பேசுவார்கள். முருகப் பெருமானுடைய அடியாராகிய அருணகிரிநாதர் இயமனை நோக்கி "சற்று இங்கே கிட்டவந்து பார்" என்று கேட்கிறார். வந்

ஸ்ரீ வ. குகசர்மா

தால் என்ன நடக்கும் என்பதையும் சொல்லிவிடுகிறார். "தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி யுன்னைத் திண்டாட வெட்டி விழவிடுவேன்" என்று கூறுகிறார். இவ்வித துணிபு அடியார்களுக்கல்லாது வேறு யாருக்குவரும்?

மணிவாசகர் "அவனருளாலே அவன்றுள் வணங்கி" என்று பாடியவர். நாம் அடியாராகத் தகுதியற்றவர் என்றும் இறைவனே தம்மை வலியவந்து ஆட்கொண்டாரென்றும் பலவிடங்களிலே தாம்பாடிய திருவாசகத்திலே சுட்டிக் காட்டியுள்ளார். இறைவன் தன்னை தமக்கே தந்துவிட்டதாக ஓர் உணர்வு அவருக்கு உண்டு. "உன்னைத் தந்தனை செந்தாமரைக்காடனைய மேனித்தனிச் சுடரே" என்று திருச்சதகத்துள் கூறியுள்ளார். உடல் பொருள் ஆவி மூன்றையும் மணிவாசகர் இறைவனுக்கே அர்ப்பணித்தார். உண்டானது எல்லையில்லா ஆனந்தம். ஏற்பட்டது ஒப்பில்லாத்துணிவு.

"தந்ததுன் தன்னைக்
கொண்டதென் தன்னைச்
சங்கரா வார் கொலோ
சதுரர்
அந்தமொன் றில்லா
ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்
றென்பால்"

என்று அவர் இறைவனைக் கேட்பது உற்று நோக்கவேண்டியது. "தொண்டர் தம் பெருமை கூறவும் பெரிதே" என்றார் ஔவையார்.

—

சரவணை - வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

—

புதியநிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான சரவணை - வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட வருடாந்தக்கூட்டம் 13-11-60ல் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாகக்குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி
தங்கபஸ்பம்
உபயோகியுங்கள்.
தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம் இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.
தாளக பஸ்பம் ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல்; கடின சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.
24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனம்.
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏந்திர கைத்தொழிற் சமாசம்
### வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப்பதிவுக்கருவிகள் (சினிமா புறெஜெக்ரேஸ்)முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின்சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 20-11-60—26-11-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இலாபங்கள் இந்த வாரம் நிச்சயம். ஆனால் முதல் நாளைக் கவனமாய்க் கழிக்கவும். வார மிகுதி புதுக்கருமங்களுக்கு நல்லாயிருக்கும், தனலாபங்களும் நிச்சயம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நண்பர்களுடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு, திங்கள் செவ்வாய் கவனமாய்க் கழிக்க வேண்டும். வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும். ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

தேகசுகம் திருந்தும். பகைவர் அழிவும் வழக்குகளில் வெற்றியும் நிச்சயம். ஆனால் செவ்வாய் பிற்பகல் புதன் வியாழம் கவனமாய்க் கழிக்கவும். வாரமிகுதி திரும்பவும் நன்றாகும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

கண் நோய்களுக்கிடமுண்டு. குடும்பச்சூழலிற் சண்டைகளுக்கிடமுண்டு. ஆனால் எதிர்ப்பை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். வியாழம் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பக் கருமங்கள் குழப்பமாயிருக்கும். தேகசுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. ஆனால் பணத்துறையில் நல்ல வாரம். உத்தியோக சித்தியும் நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தனலாபங்கள் நிச்சயம். அறியாதவர்கள் அன்னியரிடமிருந்து உதவிகள் நிச்சயம், புதுமுயற்சிகள் தாமதிக்கப்படும், ஆனாற் சித்தியாகும், பகைவர் அழிவுக்கிடமுண்டு.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

கமத்தொழில் முயற்சிகள் நல்ல பலனைத்தரும். நண்பரும் இனத்தவர்களும் உதவியாயிருப்பார்கள், ஆனால் செலவதிகமாயிருக்கும். நீர் சித்தியடைதற்கு முயன்றுழைக்க வேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேகசுகம் இந்தவாரம் சிறுக்கலாயிருக்கும். மனச்சமாதானமிருக்கமாட்டாது. சில குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. ஆனால் பணத்துறையில் நல்ல வாரம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பக்கருமங்களுக்கு இந்த வாரம் இடமுண்டு. பிதாவழி இனத்தவர் உமக்கு அதிக கோபம் தப்'டுவர். செலவதிகரிக்கும்.

### பண்டிதநேரு அவர்களின் பிறந்த நாள்

பண்டிதநேரு அவர்களின் 71-வது பிறந்தநாள் பாரத நாடெங்கும் சென்ற திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது: உலகின் பல பாகங்களிலுமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன.

—

### சங்கானை அரசடி வயிரவர் கோவில் தேர்த்திருப்பணி விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்கானை அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,
F 191 19-9-60.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

உம்முடைய கருமங்கள் நிறைவேற்றப்படாதிருக்கும். சுகவீனங்களுக்கும் சிறு அபாயங்களுக்கும் இடமுண்டு. ஆனால் பகைவர் அழிவும் வழக்கில் வெற்றியும் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உம்முடைய மனம் இந்தவாரம் அமைதியாயிருக்கமாட்டாது, எந்தப்பக்கமாயும் கருமங்களைத் தீர்மானிக்க முடியாது வருத்தப்படுவீர், ஆனால் உத்தியோகத்துறையில் ஒரு நல்ல வாரம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் இந்தவாரம் சில சண்டைகளுக்கிடமுண்டு. ஆனால் இறுதியில் நீர் விரும்பியபடி செய்யக்கூடியதாயிருக்கும். பகைவர் அழிவுக்கிடமுண்டு.

### சிவாகம விளக்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மங்களைக் குறிப்பிடுகின்றது. இக்கல்லெழுத்து கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்று சொல்லப் படுகின்றது.

ஶைவசமய நெறி என்னும் நூல் இருபத்தெட்டு ஆகமங்களைப்பற்றியும், 207 உப ஆகமங்களைப்பற்றியும் கூறுகின்றது.

காரணம், காமிகம், மிருகேந்திரம், வாதுளம், சுப்பிரபேதம் முதலிய ஆகமங்கள் அச்சேற்றப்பட்டுள்ளன.

காமிகாகமம் தமிழ் உரையோடு இருபகுதிகளாகச் சென்னையில் 1898 - இல் அச்சிடப்பட்டது.

மிருகேந்திர ஆகமம் எம். நாராயணசாமி ஐயரின் தமிழ் மொழிபெயர்ப்போடு சென்னையில் 1909 - இல் அச்சிடப்பட்டது. இவ்வாகமம் வெளளியம்பலத் தம்பிரானின் தமிழ் மொழிபெயர்ப்போடு தருமபுர ஆதீன வெளியீடாக 1946 இல் வெளிவந்தது.

பௌட்கராகமம் ஞான பாதம் சொல்லுக்குச்சொல் தமிழ் மொழிபெயர்ப்போடு சென்னையில் 1890 - இல் அச்சிடப்பட்டது. பௌட்கராகமத் தமிழுரை வெள்ளியம்பலத்தம்பிரானால் செய்யப்பட்டது.

"அண்ண லருளா
லருளுந் திவ்யாகமம்
விண்ணி லமரர்
தமக்கும் விளங்கரிது"

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

சைவாகமத் தமிழ்மொழி பெயர்ப்பிலிருந்து பொது மக்களுக்கு நாள் வாழ்க்கையில் பயன்படக்கூடியவற்றைத் திரட்டி நூலாக வெளியிடுதல் மிக்க பயனளிப்பதாகும். ஆகமங்களைப்பற்றிப் பெயர் அளவில் மாத்திரம் அறிவதால் பயனில்லை. அவை கூறும் பொருள்களை ஓரளவு அறிவதே பயனுடையதாகும். ஆகமங்களைப்பற்றிய விளக்கங்களை அறிஞர்கள் பத்திரிகைகளில் வெளியிடுவது பொதுமக்களால் வரவேற்கப்படும்.

அகஸ்தியர்.

### சத்தியமும் தருமமும் நிலை நாட்டப்படுவதே நோக்கம்

—:—

தமிழ்நாட்டில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் இராமாயணம் நாள்தோறும் பாராயணம் பண்ணப்படும் நூலாகிவிட்டது. இதை இரண்டு விதமாகப் படிக்கலாம். பக்தி முறையிற் படிப்பது ஒன்று மற்றது ஆராய்ச்சி முறையிற் படிப்பது. சத்தியத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டுவதே இராமனது நோக்கமாகும்.

வண்ணை வைத்தீசுவரவித்தியாலயத்தில் ஆற்றிய இராமாயணச் சொற்பொழிவின் போது திரு. எஸ். ஆர். துரை சாமி சாஸ்திரிகள் மேற் கண்டவாறு கூறினர்கள்.

## தொழில் நுட்பக் கல்லூரி
### (SCHOOL OF TECHNOLOGY)

சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை (G. C. E. Advanced Level) பொருளாதாரம் (Economics):—

ஆகஸ்ற்றில் வகுப்பு ஆரம்பமாகின்றது. பாடம் ஒன்றுக்கு மாதச்சம்பளம் ரூபா. 10/-. தகுதிவாய்ந்த கல்வியறிஞர் ஒழுங்கான பயிற்சியளிப்பர். சேரவிரும்பும் மாணவர் உடனே விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்.

### தமிழ் விஞ்ஞான ஆசிரியர்களுக்குச் சிங்களத்திற் பயிற்சி

சிங்களத்தில் விஞ்ஞானம் படிப்பித்தற்கு ஐம்பது தமிழ் விஞ்ஞான ஆசிரியர்கள் கல்விப் பகுதியால் நியமிக்கப் பெற்றுள்ளாரென அறிய வருகின்றது. இவர்களுக்கு மூன்று வருடகாலம் சிங்களம் கற்பிக்கப்படும். இவர்கள் முதலாம் வருடத்தில் ஐந்தாம் வகுப்பு அறிவும் இரண்டாம் வருடத்தில் எட்டாம் வகுப்பு அறிவும் மூன்றும் வருடத்தில் ஜி. சி. ஈ. அறிவும் பெற வேண்டியவர்களாவர். இக்காலத்துக்குள் தகுந்த தேர்ச்சியடையாவிட்டால் இவர்கள் தொடர்ந்து பதவி வகிக்க முடியாது. ——

### திருக்கேதீச்சரத்தில் சோமவாரத் திருநாட்கள்

கார்த்திகை மாதம் 6, 13 20, 27 ஆகிய (21-11-60) (28-11-60,(5-12-60,12-12-60 திகதிகளில் வரும் சோமவாரத் திருநாட்களில் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளி இருக்கும் கௌரி அம்பாள் சமேத ஸ்ரீ திருக்கேதீச்சர நாதருக்கு விசேட பூசை, அபிஷேகங்களும், மகோற்சவங்களும் நடைபெறத் திருவருள் துணை செய்துள்ளது. இத் தினங்களில் திருக்கேதீச்சரநாதருக்கு காலையில் விசேடபூசை, அபிஷேகங்களும் மாலையில் தேவார பாராயணமும் சைவப்பிரசங்கங்களும், சுவாமி அம்பாள் திருஉலாக் காட்சி வைபவங்களும் நடைபெறும்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std 14 சிறுப்பர்


### தமிழ்நாட்டிற் பெருமழை ஆபத்து

—

தமிழ்நாட்டிற் பெருமழை காரணமாய் இலட்சக்கணக்கான மக்கள் பெரும் ஆபத்துக்குள்ளாயினர். சென்னை மதுரை, இராமநாதபுரம் முதலிய பல இடங்களில் பல்லாயிரக்கணக்கானமக்கள் வீடுகளை இழந்து வருந்துகின்றனர். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் அழிக்கப்பட்டுள்ளன.

### தமிழில் வரவு செலவுத் திட்டம்

யாழ்ப்பாண நகரசபையார் தங்கள் வரவு செலவுத் திட்டத்தை முதல் முறையாக இந்த ஆண்டு தமிழில் அமைக்கின்றனர். ——

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எவரும் அறியாதது அந்த அங்கத நூல்

## இந்திய பேரறிஞர்கள் கருத்தும் அதுவே

( முற்றொடர் - 9 )

கந்தன் என்ற சொல் சங்க காலந் துவக்கம் தமிழில் பயின்றுவந்ததுமன்றி சம்ஸ்கிருத பாஷையிலும் வேதகாலந் தொட்டுப் பயின்று வருகிறது. மகா அலெக்சான்டர் இந்தியாவுக்குள் காலெடுத்து வைப்பதற்கு எத்தனையோ நூற்ருண்டுகளுக்கு முன் தொடுக்கப்பட்ட வேத சம்ஹிதைகளிலும் உபநிஷத்துகளிலும் கந்தன் என்ற சொல் பயின்று வருவதாக அறியக்கிடக்கிறது. (பார்க்க. சந்தோக்கிய உபநிஷதம். 7 வது அத்தியாயம்.)

இன்னுமொரு சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் முதன் முதலாகப் பெரிய சம்ராச்சியத்தை உருப்படுத்தியவர்கள் மௌரிய மன்னர் என்று சரித்திரம் பேசுகிறது. இந்த மௌரிய மன்னர் குடும்பத்துக்கு முதன்மையாய் இருந்தவன் சந்திர குப்த மௌரியன் இவன் மகா அலெக்சான்டருடன் நேரே நின்று வாதாடியதாகச் சரித்திரம் பகர்கிறது. மகா அலெக்சான்டர் இந்தியாவை விட்டு நீங்கிய பின் அவருடைய படைத்தலைவர்களையும் சேனைகளையும் அழித்துக் கிரேக்க ஆதிக்கத்தையும் இந்தியாவில் இல்லாமல் ஒழித்து அரசாண்டவன் சந்திரகுப்த மௌரியன் என்பது இப்பொழுதுள்ள சரித்திரம். இவர் காலத்தில் சிவ, ஸ்கந்த முதலிய கடவுளரின் உருவச் சிலைகள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தனவெனப் பதஞ்சலி கூறுகிறார். 'ஸ்கந்த' என்ற சொல் மகா அலெக்சான்டரின் பெயரின் திரிபாகில் மௌரிய மன்னர் அவனுக்குச் சிலைவார்த்துத் தாம் வணங்கிய சிவனுடன் ஒருங்கு வைத்தார்களா? இது பகுத்தறிவுக்குப் பொருந்துமா?

இங்கே காட்டிய பல்வேறு காரணங்களைக் கொண்டு மகா அலெக்சான்டருக்கும் கந்தவேளுக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்பதும், பேராசிரியர் கூற்றுக்கள் எட்டுணையும் பகுத்தறிவுக்குப் பொருத்தமற்றனவென்பதும் போதரும். கந்த சுவாமியாரையும் மகா அலெக்சான்டரையும் தொடர்பு செய்து பேசுவது 'ஹிட்லரையும் கிட்டினரையும தொடர்பு செய்து பேசுவதற்கு ஒக்கும்.

நிற்க, பேராசிரியரவர்கள் கந்த புராணத்தைப்பற்றிக் கூறும் கருத்துக்கள் வருமாறு:- "அதனோடு நாலாம் நூற்ருண்டளவில் வட இந்தியாவிலிருந்த ஆரியப் பூர்ப்பனர் மிக்க கருவங் கொண்டு அங்கிருந்தஏனைய மக்களைத் துன்புறுத்தியபடியால் அவரை அசுரர் எனவும் அவுணர் எனவும் அலெக்சாந்தரை அவர் கொடுமையைத் தீர்த்துத் தம்மைக் காப்பாற்ற வந்த கடவுளெனவும் பாவித்து ஒரு அங்கத நூல் பாடினரெனவும் அந்நூலின் விரிவே கந்தபுராணம் எனவும் கூறுவாருமுண்டு. அதனுல் அவனைக் கந்தகுமாரனென அழைத்தனர்போலும். கந்தன் என்பார் முருகக் கடவுளோடு பிற்காலத்தில் இணைக்கப்பட்டார்".

இது இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியரின் கூற்று.

'எத்துணைக்காலம் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினுல் இவர்கள் (யாழ்ப்பாணத்தவர்கள்) உள்ளத்தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்' என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறுதியிட்டுக் கூறுகின்றார்".

இது சைவாசிரிய கலாசாலை முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி சி, கணபதிப்பிள்ளை தமது குருப்பரம்பரைமுதல்வராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானை அநுவதித்துக் கூறியது.

இருக்க, இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியரின் கூற்றைச் சிறிது ஆராய்வோம்.

கந்தபுராணம் ஒரு கிரேக்க அரசன் மேல இந்தியர்கள் இயற்றியஓர் அங்கத நூலின் விரிவேயெனவும் கூறுவாருமுண்டு என்று பிறர் மேல் ஏற்றிக் கூறுகின்றார் பேராசிரியர். ஆனுல் அந்த அங்கத நூலை இயற்றியவர் ஆர்? அவர் பெயரென்ன? எந்தப் பாஷையில் அது இயற்றப்பட்டது? அச்சில் இருக்கிறதா? கந்தபுராணத்தின் வித்தாகிய இந்த நூலை நாமும் படித்தறிய விரும்புகிறோம். இந்த விபரங்களைப் பலர் அறியவெளிவிடுவாரா? ஏன் இதிற் கூச்சம்!

நாம் அறிந்த அளவில் தமிழில் இப்படியொரு அங்கத நூல் இருப்பதாகக் கேட்டறியோம், சம்ஸ்கிருத பாஷையிலும் இப்படியொரு நூல் இருப்பதாகச் சம்ஸ்கிருதப் பேராசிரியர்களுக்குந் தெரியவில்லை. சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறைப் பேராசிரியர் கலாநிதி. T. M. P. மகாதேவன் அவர்களும், அந்த பல்கலைக்கழகத்துச் சம்ஸ்கிருதப் பேராசிரியர் கலாநிதி. வி. இராகவன் அவர்களும் சம்ஸ்கிருத பாஷையில், மகா அலெக்சான்டரைச் சுட்டிப்பேசும் ஒரு நூலையும் தாங்கள் அறியார்கள் என்று கூறுகிறார்கள். இந்த விஷயத்தொடர்பில் கலாநிதி. திரு. T, M. P. மகாதேவன் அவர்கள் எழுதுவதாவது: "நீங்கள் கேட்டுக் கொண்டபடி சம்ஸ்கிருதப் பேராசிரியர் கலாநிதி. திரு. V. இராகவன் அவர்களுடனும் கூடி யோசித்தேன். அவரும், தான் அறிந்த அளவில், அலெக்சான்டரைச் சுட்டிப்பேசும் ஒரு நூலும் சம்ஸ்கிருத பாஷையில் இல்லையென்று கூறுகிறார்".

திரு. மு. வைத்தியலிங்கம்

"கந்தபுராணத்தில் கந்தக் கடவுள் தேவர்களுக்கு இடுக்கண் விளைத்த சூரபன்மன் முதலிய அசுரரைச் சங்கரிக்கச் சிவபெருமானிடத்து உற்பவித்தாரெனக் கூறப்பட்டுள்ளது". இது பேராசிரியர் அவர்களின் கூற்று.

முருகக்கடவுள் சூரபன்மன் முதலிய அசுரரைச் சங்கரிக்கச் சிவபெருமானிடத்து உற்பவித்தாரெனப் பல சங்க இலக்கியங்களிலும் சந்தேக விபரீதமறக் கூறப்பட்டிருக்கின்றதே.

பார்க்க:

(1) பெரும்பாணுற்றுப்படை வரி. 457—459

(2). கலித்தொகை பாட்டு 83 வரி. 13—15

(3) „ பாட்டு 104 வரி. 13—14

(4) பரிபாடல் பாட்டு 9 வரி. 70

(5) அகநானூறு பாட்டு 59 வரி, 10—12

இருக்க, பேராசிரியருடைய கட்டுரையில் உண்மையைத் திரித்துக்கூறும் பல பகுதிகளைக் காணலாம். அவைகள் எல்லாவற்றையும் எடுத்து ஒவ்வொன்ருக ஆராய்ந்து காட்டுவது கஷ்டமான செயலாகும். ஒன்று இரண்டை இங்கே காட்டுகிறோம்.

"இனி, அசுரர் தோன்றிய வகையினைப்பற்றிப் புராணகாரர் எடுத்துரைக்கும் வகையினைச் சிறிது ஆராய்வோம். அசுரர் யாவரும் காசிபமுனிவருக்கு மாயையிடம் பிறந்த மக்களெனக் கந்தபுராணம் கூறும்".

கந்தபுராணத்தில் அசுரர் தோற்றுபடலத்தில் சூரபன்மா முதலிய அசுரர் தோன்றிய கதை கூறப்பட்டிருக்கிறது. ஆனுல் அசுரர் யாவரும் காசிபமுனிவருக்கு மாயையிடம் பிறந்தவர்களல்லர். மாயையிடமும் அசுரர் தோன்றியிருக்கிறார்கள். அதற்கு முன்னும் அசுரர்கள் இருந்திருக்கிறார்கள் என்று கந்தபுராணங் கூறுகின்றது. மாயையே ஓர் அசுரனுடைய மகள்.

"சதபத பிராமணத்தில் காசியப்பர் என்னும் சொல் ஆமையைக் குறிக்கும்". பேராசிரியர் அவர்களின் கூற்று.

சதபத பிராமணத்தில் காசிபர் என்னும் சொல் காசியப்பர் என்னும் முனிவரையே குறிக்கின்றது இது மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. பார் 52. சதபதப் பிராமணம் காண்டம் 13 அத்தியாயம் 8. வசனங்கள் 14, 15. "விசுவகர்மன் என்பவன் இந்த யாகத்தை ஒரு முறை செய்தான். இதனைச் செய்து எல்லாவுயிர்களிலும் மேம்பட்டான், எல்லா உயிர்களுமாஞன்; உண்மையில் இதையறிந்தவன் சர்வமத யாகத்தைச் செய்கிறுன் அன்றி இந்த உண்மையை அறிகிறவனும் எல்லா உயிர்களிலும் மேம்படுகிறுன், எல்லா உயிர்களும் ஆகிறுன் - 14.

இவனுடைய யாகத்தை முன்னின்று நடத்தியவர் காஸ்யப்பர், இதையொட்டியே etc etc 15.

இஃதன்றி அயிதிரேய பிராமணத்திலும் காஸ்யப்பர் ஒரு முனிவரென்றே கூறப்பட்டிருக்கிறது.

முனிவர்களை ஆமைக்கு ஒப்பிட்டுக் கூறுதல் இந்து சமய மரபாகும். அதனுல் முனிவர்கள் ஆமையல்லர், எங்கள் பேராசிரியருக்கு ஒரு வேளை 'காஸ்யப' என்ற முனிவர் பெயருக்கும் 'கச்சப' என்ற ஆமையின் பெயருக்கும் பேதந் தெரியவில்லைப் போலும்! முகூர்த்தத்துக்கும் மூர்த்தத்துக்கும் பேதந்தெரியாத பேராசிரியருக்கு இது தெரியாததில்என்ன அதிசயம்,

இனி, பேராசிரியர் அவர்களின் சில கூற்றுக்கள் பித்தர், பாலர் கூற்றுக்களுக்கு நேராகும் எனலாம். உதாரணமாக:

(a) "காஸ்பியன் கடலையே காசியப்ப முனிவரென உருவகித்துச் சொன்னுரெனவும்...... நம்பப்படுகிறது".

(b) "சாகத்துவீபம் அல்லது சித்திய நாட்டை (Scythian Country) சூழ்ந்திருப்பதே கஸ்பியன் கடலாகிய பாற்கடலென்பர்".

இவைகள் நூதனமான கற்பனைகள். சிறிதும் ஆதாரமற்றவை. பிரான்சிய தேசத்துத் தத்துவஞான விற்பன்னர் றெனே ஜெனேன் என்பவருடைய கருத்தும் இதுவாகும். "The theory that Aryans invaded India and planted a civilization together with a caste-system, is a shadow without a substance, a will-o-the whisp, which flitted across the overheated inauguration of a few orientalists". Rene Gnenone.

—தொடரும்,

---

### கூட்டுப்பிரார்த்தனை வருடாந்த விழா

சூராவத்தை அம்மன் கோயிலில் வெள்ளிக்கிழமை தோறும் செய்யப்பட்டுவரும் கூட்டுப் பிரார்த்தனையின் ஆண்டுவிழா ஐப்பசிக்கடைசி வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாகச் செய்யப்பெற்றது. அத்தருணம் திரு, வி. கே. ஆறுமுகமவர்கள் "பக்தகவுரி" என்னும் பொருளில் பக்கவாத்திய சகிதமாய்ச் சிறந்த பிரசங்கமொன்று செய்தார்கள்.

### இன்னுமொரு மொழிச் சட்டம்

உத்தியோக மொழி உபபிரிவுகள் எனப்படும் உத்தியோகமொழிச்சட்டமொன்று அரசாங்கத்தால் அமைக்கப்படுகின்றது. உத்தியோக மொழிச் சட்டம்பற்றிய விபரங்கள் இதில் இடம்பெறும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆங்கிலம் உபயோகித்தற்கு இச்சட்டம் இடங்கொடுக்குமென்றும் அறிய வருகின்றது.

---


### COMMISSION SALE
### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு வழக்கு இல. 6544.

வழக்காளி :
சின்னையா கிருஷ்ணசாமி
தொண்டமனுறு
எதிராக

(1) நாகமணி சண்முகம்
(2) பெண் ஆனந்தமையிலு
தொண்டமனுறு.
- எதிராளிகள்.

மேற் குறித்த இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பிய கொமிசன் அதிகாரப்படியும் இதன்கீழ்காணும் ஆதனம் 1960ம் ஆண்டு மார்கழி மாசம் 10ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் குறித்த ஆதனமிடமாக இருந்து என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கெருடாவில் குறிச்சி "சிங்கரன்" நிலப்பரப்பு 3 5/8, ஷை நிலப்பரப்பு 3 5/8, ஷை நிலப்பரப்பு 3 5/8, ஷை நிலப்பரப்பு 3 5/8, இதுவும் "சுடுகாட்டுப்புலம்" நிலப்பரப்பு 24 7/8, கொம்மஞ்ஞேவிற் கொள்வினை சுடுகாட்டுப் புலம் நிலப்பரப்பு 5 5/8. "வடக்கில் கலட்டி" நிலப்பரப்பு 13⅜, இவைகளில் ஆட்சிப்படி நிலப்பரப்பு 11½, இதில் மேற்குப்புறமாக நிலப்பரப்பு 8 குளி 11¾, இதில் வடக்குப்புறமாக நிலப்பரப்பு 5, இதற்கு எல்லை கிழக்கும், தெற்கும் மாணிக்கம் சின்னத்தம்பிக்கு உடைய ஆதனம், வடக்கு ருேட்டு. மேற்கு சின்னத்தம்பி இராமசாமியின் உரிமைக்காறருக்குரிய ஆதனம்; இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், கல் வீடு, தென்னைகள், பனைகள், வேம்புகள், கிணறு, செய் பயிர்கள் வான் பயிர் முழுவதும்.

| | ரூ. ச. |
|---|---|
| தீர்வைத்தொகை | 3840-00 |
| 4-8-60 தொடக்கம் 25-8-60 வரை 3000/-க்கு 10 வீத வட்டி | 25-00 |
| இதற்குப்பின் 3865/-க்கு 5 வீத வட்டி 25-8-60 தொடக்கம் 3-11-60 வரை | 48-00 |
| கோட்டுச் செலவு | 159-00 |
| மொத்தம் | 4072-00 |

கா, முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer,
சந்நிதிவேல்,
பருத்தித்துறை, 10-11-60.
M. 144 18-11-60


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி மூலம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

தலா (100) நூறு ரூபா வீதமும் மேற்பட்ட ஒவ்வொன்றிற்கும் (50) ஐம்பது ரூபா வீதமும் அளிக்கப்படும்.

(D) சிரேட்ட பல்கலைக் கழகப் பிரிவேனுக்களுக்கு அளிக்கப்படும் விசேட உபமானியங்கள் வேறு. வாசிகசாலை மானியங்களும் வேறு

மேலே கூறியவற்றிலிருந்து ஒரு பிரிவேனுவில் என்ன நடக்கின்றது, என்ன நடக்க வேண்டுமென்பதும் அரசாங்கம் அதற்களிக்கும் வசதியும் பண உதவியும் எவ்வளவு என்பதும் நமக்கு ஓரளவுக்குத் தெரிகின்றது. அதனுடைய அந்தஸ்தும் எப்படியானது என்பதும் தெரிகின்றது. பிரிவேனுவின் தாதையாகிய தகநாயக்காவின் பாஷையில் சொல்லப்போனால், "ஒரு பிரிவேனுப் பாடசாலை ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளை நடத்தும் ஓர் உதவி பெறும்பாடசாலையேயாகும்." மேலும் அவர் கூறுகிறார்: 'புதிய பிரிவேனுச் சட்டம் ஆறுவதின்படி சாதாரண உதவிபெறும் பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களைக் கற்பிப்பதுமாத்திரமல்ல, ஒரு பிரிவேனுவில் சாதாரண உதவி பெறும் பாடசாலையின் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்படாத புதிய பாடங்களையுங்கூடப் படிப்பித்தற்கும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.'

(கான்சாட்தொகுதி 40. இல9)

இவ்வாறான பிரிவேனுபாடசாலைகள் சுமார் 200 (இருநூறு) வரை உண்டு என்று திருவாளர் தகநாயகாவே சொல்லுகின்றார். (கன்சாட் தொகுதி 40 இல. 9 பக்கம் 1710.)

## பிரிவேனுவும் பஞ்சாயத்தும்

உதவி பெறும் பாடசாலைகளிலும் பார்க்கக் கூடியவசதிகளையும் சலுகைகளையும் அனுபவிக்கும் பிரிவேனுப் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கவில்லையே என்ற கவலையையோ அல்லது அதற்கான காரணங்களையோ வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமன்று. அதற்கு வேறு இடம் இருக்கின்றது. இங்கே நாம் குறிப்பிட விரும்புவது சிங்கள மொழி வளர்ச்சிக்கும் சிங்களக் கலை கலாச்சார வளர்ச்சிக்கும் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பெருவாய்ப்பு சிறு அளவிற்றானும் தமிழுக்கும் தமிழ்க் கலை கலாச்சார் வளர்ச்சிக்கும் கொடுக்கப்படவில்லை என்பதேயாகும். உண்மையில் இப்பிரிவேனுப் பாடசாலைகள் சிறந்த சேவையைச் செய்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஒரு நாட்டின் சிறந்த நிர்வாக அமைப்பிற்கு எவ்வாறு கிராமப் பஞ்சாயத்துக்கள் தகுந்த 'அடிப்படைகளா'கத் தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்படுகின்றனவோ அவ்வாறே ஒரு பிரிவேனுவும் ஒரு நாட்டின் மொழி, கலைகலாச்சார வளர்ச்சிக்குக் காத்திரமான அத்திவாரமாகவுள்ளது. ஆகையினாலேயே தமிழ் மொழி மூலமும் இப்படியான பிரிவேனுக்கள் வேண்டுமெனத் துடிக்கின்றோம். நமது மொழியும் கலையும் வளரவேண்டுமானால் எமக்கு இழைக்கப்பட்ட அநீதி துடைக்கப்படவேண்டும். இதற்காக நாம் உரிமைப் போராட்டம் எடுப்பது பிழையான தொன்றல்லவே.

## என்ன செய்யலாம்?

மிகவும் கட்டுப்பாடான நிலையில் தமிழ் மக்கள் நாகரிகமான வழிகளில் அரசாங்கத்தை அணுகி வெற்றிகாண முயலுதல் வேண்டும். இந்நாட்டிலுள்ள சகல தாபனங்களும் பிரதமரையும் கல்வி மந்திரியையும் நீதி வழங்குமாறுகேட்டுக்கொள்ளவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்து 'உள்ளும் புறத்தும்' பிரச்சனையை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வந்து வெற்றிகாண்பதற்குரிய நடவடிக்கைகளைத் தனியாகவோ கூட்டாகவோ விரைந்து மேற்கொள்வது தமிழ்த் தாய்க்குக் காலத்தினாற் செய்யும் உதவியாகும். எதுவும் இன்றே செய்யவும் வேண்டும், இன்னே செய்யவும் வேண்டும்.

—


### கோட்டு விற்பனவு விளம்பரம்

சிறுப்பிட்டி செல்லையா பொன்னையா வழக்காளி.
இல, M. B. 3059
எதிராக
சிறுப்பிட்டி
1. அருணாசலம் செல்வராசா.
2, பெண் தங்கம்மா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 3059 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1960 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 17 ம் திகதி (17-12-60) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 7718-75-ம் இதில் ரூபா 5000 க்கு 26-9-59 திகதி தொடக்கம் 25-8-60 திகதிவரைக்கும் 100 க்கு 8 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் மூழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 298-15 சதம்,

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க்கோயிற்பற்று புத்தூர் தெற்கிறை 'இருவிவயல்' நெற்பரப்பு (30ம்) எல்லைகிழக்கு சிற்றம்பலம் சிவசம்புவின் உருமைக்காரரின் ஆதனம். வடக்கு அருணாசலம் செல்வராசாவின் ஆதனம். மேற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் சிறுப்பிட்டி சிவகாமி அம்மன்கோவில் ஆதனமும். தெற்கு ஐயாத்துரை கைம்பெண் வேதநாயகிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு K 179/151.

2. மேற்படி புத்தூர் தெற்கிறை "அத்தா" நிலப்பரப்பு ஆறு (6ம்) கிணறும் எல்லை கிழ கிழக்கு சின்னப்பு தில்லைநாதருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ரோட்டு தெற்கு கால்பாதை. இதடங்கலும். முற்பதிவு K. 137/62,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, & Valuer,
Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 1-11-1960.
M. 145 18-11-60.


# தமிழுக்குண்டாகின்றன இடர்கள் பல

## தமிழ்ப்பெருமக்கள் மருத்துவரா யமையவேண்டிய கடன்

"மலரவன் செய்வெற்றுடம்பு மாய்வனபோல்
மாயா மற்றிவர் செய்யுமுடம்பு"
(குமரகுருபரர்)

மக்களின் இயற்கை அறிவை வளர்ப்பது கல்வி. அக்கல்வி பல மொழிகளாகி அமையும். பாரத நாட்டுப் பழைய மொழிகள் தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய இரண்டுமேயாம். தென்மொழி என்ற தேன்மொழி தமிழ்மக்களின் பெருந்திரவியமாகும். இலக்கண இலக்கியம் என்றும், இயல் இசை நாடகம் என்றும் தமிழ் மொழியைச் சான்றோர் வகுத்துக்கூறுவர் தமிழோசை திருச்செவி மடுப்பவே தமிழகம் நாடி அம்பலவாணர் தென்னாடு போந்தனர். தமிழ்க்கிழத்தி அருள் கற்பாருக்கு வேண்டும். மேனாடுகளிலும் அவ்வத்தேச மொழி வல்லுநர் பலர் உளர். தமிழகத்தும் கலைபலவுணர் புலவர்கள் பலருளர். ஈழநாடு தமிழ்ச் செல்வி நடம்புரி நன்னாடாகும். யாழ்ப்பாணம் தமிழரசர் ஆண்டகாலம் முதல், தமிழ்ச்சுவை கண்ட தக்க பேரறிஞர்களையும் காலந்தோறும் தந்து மகிழ்கின்றது. தமிழின் வளங்கண்டு மக்களை உயர்வுபெறச் செய்தவர் நாவலரவர்களே! தமிழும் சைவமும் அப்பெரியாரின் இருகண்கள். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகியவைகளை இறைவனின் மூன்று கண்கள் போல அப்பெருந்தகையார் கருதினர் என்றால் அது பிழையாகாது. அந்நாவலரவர்கள் வழியே கற்றுத் திகழ்ந்தாரும், திகழ்வாரும் பலரே. சைவசமயமும் தமிழும் மட்பாத்திரங்களன்று — சிவகிருபை பொதிந்த பொற்பாத்திரங்களே! இவைகளை யாவரும் தீண்டலாம். ஒருவருக்குக் கலையறிவுமட்டும போதாது. ஒழுக்கமே விழுப்பந்தருவது. குருமூலமாக அன்பாகக் கற்று அடங்குவதே மக்கட்பண்பாடாகும். 'கற்க கசடற" என்பர். கற்றவழியொழுகல் காட்சிக்கெளியனாதல் முதலியன கற்றவர்க்கு இருத்தல்வேண்டும். வாக்குச்சாதுரிய மமையின் பொன்மலர் நாற்றமுடைத்தாஞ் சிறப்பாகும்.

வித்துவ சிரோமணி கணேசையரவர்களின் புகழுடமபை ஆதாரமாகக் கொண்டு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் தமிழன்னையளித்த காட்சியின் மாட்சி கூறுந்தரத்ததன்று. பேரறிஞர்கள் சர்க்கரைக் குன்றில் [illegible] தனர். பன்னூறுக்கணக்கான மக்கள் குழுமிக் கேட்டு இன்புற்றனர். பொன்னையா நினைவு மன்றத்தவர் செந்நிலையும் பெருநினைவை யுண்டாக்கிற்று. கலைப்புலவர் க. நவரத்தினமவர்களின் ஊக்கம் பேராக்கமாக விகசித்தது. இதுவரையில் இங்கே கண்டிராத தென்றமிழ் தேன் பிலிற்றும் மாமலர் பரிமளங்கொன்று தோன்றியது. பன்னூறு நாக்கொண்டு பாராட்டினும் கணேசையரவர்களின் செந்தமிழ்ப்பணிக்கு உரியதேயாகும். அருந்தமிழ் நல்கிய திருந்திய காட்சிக்கு அக்காட்சிதான் சமானம். நிற்க;

தமிழுக்கு வரும் இடர்களோ பல. கல்வி நிலையங்களுக்குப் பெரும் நோய் ஏறபட்டுள்ளது. தமிழ்ப் பெருமக்களே அதற்கேற்ற மருந்துவராக ஒன்று சேர வேண்டும். நாவலர்பெருமானே சைவத்திற்கும், தமிழுக்கும் எங்கள் முதற்குரு ஆவர். மூலபுருடரான அவருடைய உருவச்சிலை தாபிகக வேண்டும. வரலாற்று மலரும் மலரவேண்டும். அந்நாளை எதிர்பார்க்கும் தமிழ்ப் பண்பாடுடையார் பலருளர். "தமிழும் சமயமும் இருகண்கள் என்று நாவலரவர்கள் கருதினர்" என்ற பேச்சுமட்டும் போதாது. செயலில் ஒவ்வொரு தமிழ்க்குடும்பமும் ஈடுபட்டு இன்புற்று வாழ்க.

—

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

## சமயக்கல்விப் பட்டதாரி.......

முதற்பக்கத் தொடர்ச்சி )

அதன் பிரகாரம் பின்வரும் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(அ) ஆசிரியர் தகுதி:—

சித்திரம், சங்கீதம், விளையாட்டு, கைப்பணி, மனையியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு விசேஷ தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிப்பதுபோலச் சமயக்கல்விக்கும் மத்தியமேல் வகுப்புக்களுக்கு விசேஷ தகுதிபெற்றவர்களை சமய பட்டதாரிகளை) ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும்.

சைவ சமயபாடம் போதிப்பதற்குப் பின்வருவன அன்னார் தகுதிகளென சைவப் புலவர் சங்கம் ஆலோசனை கூறுகின்றது.

(i) சைவப்புலவர், இளஞ் சைவப் புலவர்.

(ii) சித்தாந்த பண்டிதர் சித்தாந்த பால பண்டிதர்.

(iii) தமிழ்ப் பண்டிதர் அல்லது தமிழ்வித்துவான் தேர்வுக்குச் சைவசித்தாந்தத்தை ஒரு பாடமாக எடுத்துச் சித்திபெற்றவர்கள்.

(iv) பல்கலைக்கழக B. A; M. A; தேர்வுகளுக்குச் சைவ சித்தாந்தத்தை ஒருபாடமாக எடுத்துச் சித்திபெற்றவர்கள்.

(ஆ) வித்தியாதரிசிமார்கள்:

வித்தியாதரிசிமார்களுக்குரிய பொதுத் தகுதிகளோடு ஆசிரியர்களுக்குக் கூறப்பட்டஷ் விசேஷ தகுதிகளும் இருத்தல் வேண்டும்.

(இ) சம்பளத்திட்டம்:—

சாதாரண ஆசிரியராகக் கடமையாற்றத் தகுதிபெறுத வர்கள் மேலே கூறிய பரீட்சைகளில் மட்டும் தேர்ச்சி பெற்றிருப்பின் அப்பரீட்சையின் தரத்துக்கேற்ப அவர்களுக்கு ஒரு நியாயமான சம்பளத் திட்டம் புதிதாக அமைக்கப்படுதல் வேண்டும். மற்றவர்களுக்குச் சப்பள உயர்வுமட்டும் வழங்கப்படல் வேண்டும். இப்பிரேரணைகளோடு அரசாங்கம் எடுக்கும் பாடசாலைகள் "ஜனவரி" மாதம் 2-ந் திகதி ஆரம்பிப்பதாகக்கூறப்படுகிறது. அன்று சைவர்களுக்கு ஒரு விசேஷ தினமாகிய திருவாதிரை நாள் ஆகையால் அன்றும் சைவப் பிள்ளைகளுக்கு விடுமுறை நாளாகக் கணிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சமய வளர்ச்சிகருதி உழைக்கும் இச்சங்கத்துக்கு நிதி உதவி செய்யும்படி இந்து சமய கரும ஆலோசனைச் சபையைக் கேட்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

—

## நாம் செய்ய வேண்டியது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.ஆர். துரைசாமிசாஸ்திரி அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள்.

ஈழத்தமிழ்மக்களுக்குப் பல இன்னல்கள் நிகழ்ந்துவரும் இக்காலத்தில் நாம் சோர்வு அடையாது விளிப்புணர்ச்சியோடு இருப்பதோடு கஷ்டங்களை வெல்ல முயல்வதன் மூலம் நாம் தமிழையும் சைவத்தையும் வளர்க்க வேண்டும். நீதிக்கும், தீய சக்திக்கும் இடையே போர்ராட்டம் நடைபெறுவது புதுமையல்ல; ஆனால் தீய சக்தியின் கோலத்தைக்கண்டு வாளா இருப்பது பெருந்தீமையாகும் என்று திரு. ச. அம்பிகைபாகனவர்கள் தமது தலைமையுரையில் கூறினார்கள்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 18-11-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org